RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s1846

OPEN ACCESS

# ஆசாரக்கோவையில் கல்வி ஒழுக்க மதிப்பீடுகள்

**ச. மரியஜெயந்தி [அ, *], பொன். கதிரேசன் [அ]**

[அ] தமிழாய்வுத் துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, (பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது), மேலைச்சிவபுரி-622403, தமிழ்நாடு, இந்தியா.

# Ethical Studies in Aacharakkovai

**S. Mariya Jayanthi [a, *], Pon Kathiresan [a]**

[a] Research Department of Tamil, Ganesar College of Arts and Science, (Affiliated to Bharathidasan University), Melaisivapuri-622403, Tamil Nadu, India

* Corresponding Author: mariyajanthi01@gmail.com

Received: 23-08-2022
Revised: 23-09-2022
Accepted: 01-10-2022
Published: 08-12-2022

Check for updates

**ABSTRACT**

Aacharakkovai is a poetic work of didactic nature belonging to eighteen texts anthology of Tamil literature. This book guides man to live his life in a good manner from birth to death. By adapting the book Aaridam, the writer has sung more than hundred songs in this book. This book is written in Venba style and it belongs to the fifth century. The author of this book is Kayathur Mulliyar. Aacharam means the moral standards that people follow in life. This book has been created with the notion that all the people of the world can know the moral standards that should be followed in life. This article examines the values of academic discipline that is prevalent in Aacharakkovai. Education is an important principle of morality. Educated people live with discipline. Academic discipline is a code of conduct that can be cherished at all times. The purpose of this article is to know and explain such educational thoughts through Aacharakkovai.

**Keywords:** Aacharakkovai, Ethical Studies, Tamil Literature, Kayathur Mulliyar

## முன்னுரை

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஆசாரக்கோவை மனித குலத்திற்குக் கிடைத்த ஒழுக்கம் நிறைந்த ஆய்வுக் களஞ்சியம் ஆகும். நம்முடைய முன்னோர்கள் கண்ட வாழ்க்கை முறையை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. மனிதர்களின் வகைகளை அறிவதற்கு இந்நூல் பயன்படுகின்றது. மனிதன் பின்பற்ற வேண்டிய பழக்க வழக்க ஒழுக்கங்களை நிரல்பட எடுத்துக் கூறுகின்றது. குறிப்பாக, கல்வி கற்ற மனிதன் எத்தகைய அறிவார்ந்த செயல்களைச் செய்ய வேண்டும் எதை செய்யக்கூடாது என்பது பற்றிய தெளிவான விளக்கங்களை இந்நூல் வழியாக அறிந்து கொள்ள முடிகிறது. உலகத்தவர்கள் கண்ட நல்ல நெறியை இந்த நூல் வழியாக அறிந்து கல்வி சார்ந்த மதிப்பீடுகளை விளக்கும் விதமாக இக்கட்டுரை அமைகின்றது.

## எண்வகை ஒழுக்கநெறிகள் கல்வி

ஆசாரக்கோவையில் 8 வகை ஒழுக்க நெறிகளை முதல் வெண்பாவில் சுட்டிக்காட்டுகிறது. அவற்றுள் கல்வி கற்றவன் ஒழுக்கத்தின் ஆதாரப் பொருளாக திகழ்கின்றார் என்பது பெருமைப்பட உரைக்கின்றது. இதனை,

"நன்றி யறிதல் பொறையுடைமை இன் சொல்லோடு

இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு

ஒப்புரவு ஆற்ற அறிதல் அறிவுடைமை

நல்லினத்தோடு நட்டல் இவை எட்டும்" சொல்லிய ஆசார வித்து

எனும் பாடல் வழியாக அறியமுடிகிறது (Ramasubramaniam, 2009). உலகத்தில் வாழ்கின்ற மனிதர்களுக்கு எட்டு வகையான ஒழுக்கங்கள் இருக்க வேண்டும் அவற்றைப் பின்பற்ற வேண்டும். அவற்றுள் கல்வி என்பது எத்தகைய தனித்தன்மை வாய்ந்தஒன்றாக இருக்கிறது என்பதை இப்பாடல் எடுத்துக் கூறுகின்றது. பிறருக்கு உதவி செய்ய வேண்டும். பொறுமையைக் கடைப்பிடித்தல், இனிய சொல் பேசுதல், பிற உயிர்களுக்குத் தீங்கு செய்யாது இருத்தல், கல்வி கற்றவன் அறிவு உடையவனாதல், உலக நடையை அறிந்துகொண்டு அறிவுடைமை, மெய்ஞானம் அறிதல், நற்குணம், உத்தமர்கள் உடன் நட்புக் கொள்ளுதல் ஆகிய எண்வகை உறுப்புக்களும் கல்வியின் பெருமையை இங்கு அறிய முடிகிறது.

## கல்வி கற்றோர் ஒழுக்க நெறி தவறார்

மனிதர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் கற்ற கல்வியை மறக்கக்கூடாது அவர்களின் கல்வி ஒழுக்கத்தை எந்நாளும் பின்பற்றாமல் தவற விடக்கூடாது. யார் பின்பற்றினாலும் பின்பற்றாவிட்டால் கல்வி அறிவு மிக்கவர்கள் ஒழுக்கத்தை மீறாமல் மாறாமல் காப்பார்கள் என்பதை ஆசாரக்கோவை நூல் எடுத்துரைக்கிறது. இதனை

"பிறப்பு நெடு வாழ்க்கை செல்வம் வனப்பு

நிலக்கிழமை மீக்கூற்றம் கல்வி நோயின்மை

இலக்கணத்தால் இவ்விரண்டும் எய்துப என்றும்

ஒழுக்கம் பிழையா தவர்"

வழி அறியலாம் (Ramasubramaniam, 2009). ஒழுக்கத்திலிருந்து மாறாதவர்கள் எக்காலத்திலும் 8 நிலையிலிருந்து மாற மாட்டார்கள். நற்குடியில் பிறத்தல், நீண்ட வாழ்நாள், பொருள், செல்வத்தோடு விளங்குதல், அழகு உடமை, மேன்மையான சொல்வளம் உடைமை, கல்வியில் மேம்படுத்தல், நோயற்ற வாழ்வு, வாழ்ந்தார் நிலத்தின் உரிமை உடைமை பெறுதல் என்னும் எண்வகை ஒழுக்க நிறைகளை பெற்று கல்வி கற்றோர் வளமுடன் வாழ்வர்.

## எக்காலத்தும் போற்றப்படும் கல்வி ஒழுக்கம்

மனிதர்கள் வாழ்கின்ற காலங்களில் ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி அதை பாதுகாக்க வேண்டும். கி. பி. ஐந்தாம் நூற்றாண்டிலேயே நான்கு வகையான ஒழுக்கங்களைப் பின்பற்றி உள்ளார்கள். ஆசானுக்கு காணிக்கை தருதல் வேள்வி புரிதல் தவம் ஏற்றுதல் கல்விகற்ற ஆகிய நான்கு ஒழுக்கங்களை எக்காலத்திலும் மறவாமல் புரிதல் வேண்டும் என்னும் கல்வியின் பெருமையை இங்கே அறிய முடிகிறது. இதனை,

"தக்கினை வேள்வி தவம் கல்வி இந்நான்கும்

முப்பால் ஒழுக்கினால் காத்துய்க்க உய்யாக்கால்

எப்பாலும் ஆகா கெடும்"

குருவுக்கு மரியாதை செலுத்தி காணிக்கை தந்து பண்டையத் தமிழர்கள் கல்விகற்று உள்ளனர் (Ramasubramaniam, 2009). கல்வி கற்பது வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய மிக முக்கியமான ஒழுக்கம் என்பதே இந்தப் பாடல் வலியுறுத்துகிறது.

## தேவரைப் போல் போற்றப்படுவோர் ஆசிரியர்

ஆசிரியர்கள் மதிக்கப்படத் தக்கவர்கள். ஆசிரியர்களை தேவர்களைப் போல போற்றிப் பாதுகாக்க வேண்டும். உலகத்தில் உள்ளவர்கள் ஐவரை தேவர்களைப் போல கருதி போற்றுதல் வேண்டும். அரசன் ஆசிரியன் என்ற தாய் பெற்ற தந்தை தமையன் ஆகிய ஐவரையும் வணங்குதல் வேண்டும் என்பதை,

"அரசன் உபாயத்தி்யான் தாய் தந்தை தம்முன்

நிகரில் குரவர் இவரிவரைத்

தேவரைப் போலத் தொழுதெழுக என்பதே

யாவரும் கண்ட நெறி"

வழி அறியலாம் (Ramasubramaniam, 2009). பல நூறு கோடி மக்கள் வாழ்கின்ற இந்த உலகில் ஐந்து பேரை வணங்கி வருதல் வேண்டும் என்னும் தத்துவார்த்தமான கல்வி வாழ்வியலைஅறிந்துகொள்ள இந்தப் பாடல் உதவுகின்றது.

## கேள்வி ஞானம் உடையோர் செயல்

சிறந்த கேள்வி ஞானம் உடைய மேன்மக்கள் கீழ்காணும் சில செயல்களைச் செய்ய மாட்டார்கள். அதாவது பிறரைப் பழித்துப் பேசமாட்டார்கள். பிறரை இகழ்ந்து கூறமாட்டார்கள். பலரும் கூடி இருக்கின்ற காலத்தில் உறங்க மாட்டார்கள். ஒரு செயலைச் செய்வதாகச் சொன்ன பின்பு அதைச் செய்யாமல் இருக்க மாட்டார்கள். வறியவர்களை இகழ்ந்து பேச மாட்டார்கள். இத்தகைய பண்பு நலம் மிக்கவர்கள் கல்வி அறிவு மிக்க கேள்வி ஞானம் உடையவர் என்பதை ஆசாரக்கோவை கூறுகின்றது. இதனை,

"பழியார் இழியார் பலருள் உறங்கார்

இசையாத நேர்ந்து கரவார் இசைவின்றி

இல்லாரை எள்ளி இகழ்ந்து தள்ளியும்

தாங்கரும் கேள்வியவர்"

என்னும் பாடல் வழியாக அறிய முடிகிறது (Ramasubramaniam, 2009). கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோர்கள் ஒழுக்கத்திலிருந்து மாற மாட்டார்கள் என்பதை இந்த பாடல் சுட்டிக்காட்டுகிறது.

## கற்றோர் அறிந்த ஒழுக்கநெறிகள்

கற்றறிந்த சான்றோர்கள் துறவியரைப் போற்றுவர். செய்யும் தொழிலில் பழிக்கு அஞ்சுவர். தாம் கற்றவற்றைப் பெரியோர் முன்பு தலைக்கனமாகக் கூறமாட்டார்கள். எல்லோருக்கும் பயனளிக்கும் வகையில் கல்வியைப் பயன்படுத்துவர் என்னும் கருத்தை,

"துறந்தாரை பேணலும் நாணலும் தாம் கற்ற

மறந்தும் குரவர் முன் சொல்லாமை மூன்றும்

திறம் கண்டார் கண்ட நெறி"

எடுத்துக் கூறுகின்றது (Ramasubramaniam, 2009). செய்யும் தொழிலைத் தெய்வமாகக் கருதுவர். ஆனால் அந்தத் தொழிலில் பழி பாவங்களுக்கு அஞ்சி தூய்மையான முறையைப் பின்பற்றுவர். கற்றதும் கேட்டதும் அவலமாய் போதல் நன்றோ என்னும் என்னும் உண்மையை உணர்ந்து கற்றறிந்தவர்கள் நடந்துகொள்வர் என்னும் கல்வியின் மதிப்பை மேலும் உணர்த்துகிறார் நூலாசிரியர்.

## அரசர் அவையில் கல்வி அடக்கம்

கற்றறிந்த கல்வி அறிவு உடையோர் அரசர் அவையில் கல்வி அடக்கமாக நடந்து கொள்வார்கள். தமது செல்வத்தைப் பற்றி பேசமாட்டார்கள் தமது கல்வியைப் பற்றிக் கூற மாட்டார்கள். தமது பொருளின் விளக்கத்தைப் புரியும்படியாகக் கூறுவர். தற்புகழ்ச்சி விரும்பாதவர்களாகக் கற்றறிந்த அறிஞர்கள் திகழ்வார்கள் என்பதை,

"இறைவர் முன் செல்வமும் கல்வியும் தேஅம்

குணனும்குலமுடையார் கூறார்

பகைவர் போல்

பாரித்துப் பல்கால் பயின்று"

கூறுகின்றது (Ramasubramaniam, 2009). அரசருக்கு மரியாதை தரும் பொருட்டு கல்வியாளர்கள் இடம் பொருள் ஏவல் அறிந்து செயல்படுவர் என்பதை இந்த பாடல் கூறுகிறது.

## மெய்யறிவு பெற்ற கல்வி சான்றோர்

கல்வி கற்ற சான்றோர்கள் மெய்யறிவு பெற்றவராகத் திகழ்வர். கிடைப்பதற்கு அரிய பொருளை விரும்பமாட்டார்கள் (Rao, 1966). தம்மை ஒருவர் இகழ்ந்த நிலை குறித்தும் வருத்தம் கொள்ள மாட்டார்கள். தீர்க்க முடியாத துன்பம் நேர்ந்த காலத்திலும் மனம் வருந்த மாட்டார்கள். இத்தகைய சிறப்பு வாய்ந்தவர்கள் தான் கல்வியாளர்கள் (Subbureddiar, 1985). அதுவும் மெய்யறிவு பெற்ற மெய்மை உடையவர் என்பதை ஆசாரக்கோவை கீழ்காணும் பாடலில் குறிப்பிடுகிறது.

"எய்தா வேண்டார் இரங்கார் இகழ்ந்ததற்குக்

கைவாரா வந்த இடுக்கண் மனம் அழுங்கார்

மெய்யாய் காட்சியவர்"

எடுத்துரைக்கிறது (Ramasubramaniam, 2009). பேராசை இல்லாதவர்களாகவும் இகழ்ச்சியும் புகழ்ச்சியும் விரும்பாதவர்களாகவும் துன்பத்தையும் இன்பத்தையும் சமமாகக் கருதுகின்றவர்களாகவும் மெய்மை உடைய கல்விச் சான்றோர்கள் திகழ்வர் என்பதை இப்பாடல் வலியுறுத்துகிறது.

## கற்றறிந்த சான்றோர்கள் மேற்கொள்ளாத செயல்கள்

கற்றறிந்த சான்றோர்கள் பெரியவர்கள் கூடி இருக்கின்ற அவையில் சில செயல்களைச் செய்ய மாட்டார்கள். அவற்றை பட்டியலிட்டுக் காட்டுகிறார் ஆசாரக்கோவை நூலாசிரியர். அவையில் உடலுறுப்புகளை அசைத்து அங்கும் இங்கும் நகர்ந்து கொண்டிருக்க மாட்டார்கள். அழுக்கு ஆடை உடுத்திக்கொண்டு அவையில் செயல்பட மாட்டார்கள். கடுமையான சொற்களைப் பேசமாட்டார்கள். இருவராக நின்று பேசிக்கொண்டுஅவையின் அமைதியை கெடுக்கமாட்டார்கள். இத்தகைய ஒழுக்கத்தைப் பற்றி,

"மன்றத்து நின்றுஞற்றார் மாசு திமிர்ந்தியங்கார்

என்றும் கடுஞ்சொல் உரையார் இருவராய்

நின்றுழியும் செல்லார் விடல்"

வழியாக அறியமுடிகிறது (Ramasubramaniam, 2009). கற்றறிந்த கல்வியாளர்கள் இடத்துக்குத்தான் போல மரியாதை தன்மையுடன் திகழ்வார்கள் என்பதை இந்த பாடல் கூறுகின்றது.

## ஆசாரத்திலிருந்து விலக்கு ஆனவர்

கல்வி அறிஞர் என்றாலே பல நூல்களைக் கற்று அறிந்தவர் என்று பொருள். ஆசார ஒழுக்கத்திலிருந்து ஒரு சிலர் அறியாமல் செயல்பட்டு இருப்பர். இதனை,

'அறியாத தேயத்தான், ஆதுலன், மூத்தான்,

இளையான், உயிர் இழந்தான், அஞ்சினான், உண்பான்,

அரசன் தொழில்தலை வைத்தான், மணாளன், என்று

ஒன்பதின்மர் கண்டீர் உரைக்குங்கால் மெய்யான

ஆசாரம் வீடு பெற்றார்'

என்னும் பாடல் நூறு வழியாக அறியமுடிகிறது (Ramasubramaniam, 2009). அதாவது ஆசார ஒழுக்கத்தை யாரெல்லாம் பின்பற்ற மாட்டார்கள் பின்பற்ற முடியாமல் போகின்றது என்று சிந்தித்தால் கீழ்காணும் ஒன்பதின்மர் என்று கூறுகிறார் நூலாசிரியர். அதாவது நூலை அறியாத வேற்று நாட்டவன், வறுமை உடையவன், முதிர்ந்த வயதுடையவன், சிறுவன், உயிர் அற்றவன், அச்சம் உற்றவன், மன்னனின் கட்டளையை மேற்கொண்டவன், மணமகன்ஆகியோர் ஆதாரத்திலிருந்து விலக்கானவர் என்று நூல் கூறுகின்றது. இப்படி நூல் முழுவதும் பல்வேறு ஆசார ஒழுக்கங்களைக் கல்வி சார்ந்த மதிப்பீடுகளை விளக்குகின்ற சிறந்த நூலாக ஆசாரக்கோவை திகழ்கின்றது.

## முடிவுரை

ஆசாரக்கோவையில் நூற்றுக்கும் மேற்பட்ட ஒழுக்கம் நிறைந்த கல்வி நெறிகளை காணமுடிகின்றது. அதுவும் கல்வி அறிந்த சான்றோர்கள் தன்னுடைய ஒழுக்கத்திலிருந்து மாறாத வர்களாக இருக்க வேண்டும். அவையில் மரியாதையுடன் நடந்து கொள்பவராக கல்வியாளர்கள் இருப்பார்கள். கற்றறிந்த சான்றோர்கள் மன்னர் முன்பு சில ஒழுக்கங்களைப் பின்பற்றுவர். இப்படி பல்வேறுபட்ட கல்வியில் சார்ந்த கருத்து வளத்தை மதிப்பீட்டு ஆய்வு செய்யும் வகையில் ஆசாரக்கோவையில் அணுக முடிகின்றது. தன்னுடைய வாழ்விலும் தன்னை சார்ந்தோர் வாழ்விலும் கல்விசார்ந்த ஒழுக்கத்தைப் பின்பற்றுபவர்களாக கல்வி சான்றோர்கள் திகழ்ந்துள்ளார்கள் என்பதை ஆசாரக்கோவை வழியாக நன்கு அறியமுடிகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஆசாரக்கோவை ஒழுக்கத்தைக் கற்றுத்தரும் களஞ்சியமாகத் திகழ்கிறது. அதே சமயத்தில் சில முரண்பட்ட கருத்துக்களும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. மேதைகளாக இருப்போர் எதனையும் படிக்க மாட்டார்கள் என்ற கருத்து இருக்கிறது. நன்கு கற்றுத் தேர்ந்தவர்கள் தான் மேதைகளாக திகழ முடியும் இருந்தபோதிலும் இந்த கருத்து ஆய்வுக்கு உட்பட்டது. கற்றவர்கள் தூய நெறியால் தோன்றிய வேதங்களை உணர்ந்து அந்தணர்களை வணங்கி வாழ்வர். மன்னரோடு கல்வியாளர்கள் பழகும் முறை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. கல்வியாளர்களின் பண்பு நலன்கள் விளக்கப்பட்டுள்ளது. மெய்ப்பொருள் காணுகின்ற அறிவு பெற்றவர்களாக கல்வி சான்றோர் திகழ்வர். கல்வி அறம் செய்யவேண்டிய முக்கியத்துவத்தை இந்நூல் கூறுகின்றது. மேலும் ஒரு முரண்பட்ட கருத்தாக புத்தகங்களைப் படிக்கக் கூடாத காலம் என்ற ஒரு கருத்து பாடல் 47 வழியாக அறியமுடிகிறது. அதாவது அந்தணர்கள் வேதம் ஓதக் கூடாது காலங்களாக நூலாசிரியர் பேசுகின்றார். அமாவாசை பவுர்ணமி போன்ற நாட்களில் வேதம் ஓதக் கூடாது உலகை காக்கும் மன்னருக்கு துன்பம் நேரும் நாள், பூகம்பம் இடிமுழக்கம் உண்டாகும் நாள் போன்ற நாட்களில் புத்தகங்களைப் படிக்கக் கூடாத காலமாக ஒரு கருத்து இங்கு உள்ளது இதுவும் ஆய்வுக்கு உட்பட்ட கருத்தாக அமைகின்றது. மனிதர் தன்னுடைய வாழ்வில் பேசும் முறைகள் உணவு உண்ணும் முறைகள் உறங்கும் முறைகள் நடந்து கொள்ளும் முறைகள் பிறரிடத்தில் பழகும் முறைகள் ஆகிய ஒழுக்கம் நிறைந்த கல்வி ஒழுக்க முறைகளை ஆசாரக்கோவை நன்கு எடுத்தியம்புகின்றது.

## References

Ramasubramaniam, V.T. (2009) Eighteen Lesser Texts, Vol 2, Sellappa Publication, Madurai, India

Rao, V.K.R.V. (1966) Kalviyum Manitha sathana valarchium, Kalaikathir Pathippagam, Coimbatore, India

Subbureddiar, Na. (1985) Kalvi Ulaviyal Kotpadugal, Manivasakar Pathippagam, Chidambaram, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License